தமிழ்Mirror
www.tamilmirror.lk
TUESDAY, JUNE 04, 2024
செவ்வாய்க்கிழமை ஜூன் 04, 2024 | ஒளி: 09 கதிர்: 265 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

# சீமெந்து குறைந்தது: விடரோ குறைகிறது

50 கிலோ கிராம் நிறையுள்ள சீமெந்து மூட்டையின் விலை 150 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக சீமெந்து நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இந்த விலை குறைப்பு இம்மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் எனவும், இதன்படி 50 கிலோகிராம் மூட்டையின்



தொடர்ச்சி P2

## 1,700 ரூபாய் வர்த்தமான அறிவித்தல்

# நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு



தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச தினக்கூலியை நிர்ணயித்து தொழில் அமைச்சரினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப் போவதில்லை என மேன்முறையீட்டு நீதிமன்றம் திங்கட்கிழமை (03) தீர்ப்பளித்துள்ளது.

குறித்த வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்து ஆணை பிறப்பிக்குமாறு கோரி தோட்டக் கம்பனிகள் தாக்கல் செய்த மனுவை விசாரித்த பின்னரே மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

இதன்படி, சம்பந்தப்பட்ட மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ள தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார உள்ளிட்டோரை எதிர்வரும் 26ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு நோட்டீஸ் அனுப்புமாறு நீதியரசர்கள் அமர்வு உத்தரவிட்டுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பிலான குறித்த வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், மே மாதம் (21) முதல் தோட்டத் தொழிலாளிக்கு நாளொன்றுக்கு 1700 ரூபாய் தினக்கூலி வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த வர்த்தமானி அறிவித்தலை சவாலுக்கு உட்படுத்தியே மேன்முறையீட்டு நீதிமன்றம் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளது.



## ஆரவாரம்...

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரம் தொடர்பில், மேன்முறையீட்டு நீதிமன்றத்தால், திங்கட்கிழமை (03) வழங்கிய தீர்ப்பை அடுத்து, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அங்கத்தவர்கள், மலையத்தில் பெரும்பாலான நகரங்களில் பட்டாசு கொளுத்தி ஆரவாரம் செய்து, தங்களுடைய மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

## தீர்ப்புக்கு நன்றி



தோட்ட தொழிலாளர்களின் 1,700 ரூபாய் சம்பள விடயத்தில் நீதித்துறை வழங்கிய தீர்ப்புக்கு, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் நன்றி தெரிவித்துள்ளார்.

தோட்ட தொழிலாளர்களின் சம்பள விடயத்தில் இ.தொ.காவின்,மறைந்த தலைவர்களான சௌமியமூர்த்தி தொண்டமான், ஆறுமுகன் தொண்டமான் காலம் முதல் இன்றுவரை தொடர்ந்தும் போராட்டங்கள் ஊடாகவே சம்பள உயர்வை பெற்றுக் கொடுத்துள்ளது.

தோட்ட தொழிலாளர்களின் சம்பள விடயத்தில் இ.தொ.கா மீது முன்வைக்கப்பட்ட விமர்சனங்கள், குற்றச்சாட்டுக்களை இ.தொ.கா தவிடுபொடியாக்கியுள்ளது. நீதி துறையின் இச்செயற்பாடானது மக்கள் மத்தியில் பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

## "நீதி வென்றுள்ளது"



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு கிடைக்கப்பெற்ற மாபெரும் வெற்றியாகவே இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் இதனை காண்கின்றது எனத் தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ், அதிகரிக்கப்பட்ட சம்பளம், பெருந்தோட்ட தொழிலாளர்களை முறையாக சென்றடைவதற்கும் தொழிற்சங்கம் என்ற

தொடர்ச்சி P2

# நாடு திரும்பிய 5 ஆண்கள் கைது



எஸ்.ஆர்.லெம்பேட்

தலைமன்னார் ஊர்மனை பகுதிக்கு வருகை தந்த இலங்கையைச் சேர்ந்த 5 பேர் திங்கட்கிழமை(3)காலை தலைமன்னார் ஊர்மனை கடற்கரை பகுதியில் வைத்து கைது செய்துள்ளனர். இந்தியாவில் இருந்து சட்ட விரோதமான முறையில் படகில் இவர்கள் ஊர்மனைக்கு வந்துள்ளனர்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட குறித்த 5 நபர்கள், கடற்படையினரால் விசாரணைக்கு உற்படுத்திய பின்னர் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2



## கள விஜயம்

கொலன்னாவ,களனி மற்றும் அம்பத்தல ஆகிய பிரதேசங்களில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, திங்கட்கிழமை (03) சந்தித்தார்.

## 3 பாடங்களிலும் 27,000 பேர் சித்தியடையவில்லை

**ஒன்லைன் முறையானது ஜூன் 5 முதல் 19ஆம் திகதி வரை திறக்கப்படும்**

இந்த வருடம் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியவர்களில் 10.04 வீதமானவர்கள் சகல பாடங்களிலும் சித்தியடைந்துள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அதேவேளை பரீட்சைக்கு தோற்றிய 269,613 விண்ணப்பதாரர்களில் 27,970 பேர் சகல பாடங்களிலும் சித்தியடையவில்லை என்றும் பரீட்சை ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார் .

இவ்வருட பரீட்சை பெறுபேறுகள் சாதனை அதிகரிப்பை காட்டுவதாக தெரிவித்த அவர்,

தொடர்ச்சி P2

## "கோழி கிடைத்தால் புரியாணி போடுங்கள்"

**மனோ கணேசன் தெரிவிப்பு**


இரத்தினபுரி மாவட்டத்தில் தொடர்ந்து கை தவறி போகும் தமிழ் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை இம்முறை பெற்றே தீருவோம். ஒன்றேகால் இலட்சம் தமிழர் வாழும், எழுபத்தி ஐயாயிரம் தமிழ் வாக்காளர் வாழும் இரத்தினபுரியில் எம்பி பதவியை பெறுவது எமது உரிமை. அது ஒரு சலுகை அல்ல. ஆகவே அடுத்த முறை எங்கள் வேட்பாளர் சந்திர குமார் இரத்தினபுரி மாவட்டத்தின் எம்பியாக வெற்றி பெற்று

தொடர்ச்சி P2



# இந்திய தேர்தல் இன்று முடிவு

**இந்தியா கூட்டணி 295 இடங்களைப் பெறும் என்று ராகுல் காந்தி கூறியுள்ளார்.**





இந்தியாவில் ஏழாவது கட்ட மக்களவைத் தேர்தல் முடிவடைந்ததையடுத்து வெளியான கருத்துக் கணிப்புகளில், ஆளும் பாரதிய ஜனதா கட்சி பெரும்பான்மை பெறும் என கணிக்கப்பட்டுள்ளது. பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி மற்றும் எதிர்க்கட்சியான இந்தியா கூட்டணியின் தலைவர்கள் இதற்கு எதிர்வினையாற்றியுள்ளனர்.

தொடர்ச்சி P2

## விசேட விடுமுறை

தற்போதைய மோசமான வானிலை காரணமாக, பின்வரும் மாகாணங்கள், மாவட்டங்கள் மற்றும் பிராந்தியங்களில் உள்ள அரச பாடசாலைகளுக்கும் செவ்வாய்க்கிழமை (04) விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

### தீமைக்கு வழிவகுக்கும்

## "அரசாங்கமே ஆள்கிறது"

எமது நாடு தற்போது வங்குரோத்தடைந்தொரு நாடாகும். இந்த வங்குரோத்து நிலையில் இருந்து மீள்வதற்கு வெளிப்படையான, நேர்மையான மற்றும் திருட்டு இல்லாத திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும். என்றாலும் அவ்வாறானதொரு எந்த திட்டமும் இதுவரையில் ஆரம்பிக்கப்படவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “நீதி வென்றுள்ளது”

ரீதியில் தொழிலாளர்கள் பக்கம் பக்க பலமாக நின்று செயல்படுவோம் என்று தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதன அதிகரிப்பு தொடர்பில் வெளியிடப்பட்ட வர்த்தமானியை இரத்து செய்யக் கூறி பெருந்தோட்ட நிறுவனங்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தது.

அதற்கமைய, திங்கட்கிழமை (03) அவ்வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட போது கடந்த மாதம் 21 ஆம் திகதி வெளியிட்ட வர்த்தமானிக்கு எதிராக இடைக்கால தடையுத்தரவை வழங்க முடியாதென மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய தேர்தல் இன்று முடிவு

கடைசிக் கட்ட தேர்தல் பிரசாரம் முடிந்ததும், பிரதமர் நரேந்திர மோதி கன்னியாகுமரிக்குச் சென்று சுமார் 45 மணிநேரம் தியானம் செய்தார். மூன்றாவது பதவிக் காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் செயல்படுத்த வேண்டியவை தொடர்பான ‘100 நாள் நிகழ்ச்சி நிரல்’ கூட்டத்தை பிரதமர் (ஞாயிற்றுக்கிழமை) நடத்தினார்.

பாஜக தனித்து 370 இடங்களிலும், தேசிய ஜனநாயகக் கூட்டணி 400 இடங்களிலும் வெற்றி பெறும் என்று பாஜக தேசியத் தலைவர் ஜேபி நட்டா கூறினார்.

இதற்கிடையில், சனிக்கிழமை எதிர்க்கட்சிகள் கூடி எதிர்கால வியூகம் குறித்து ஆலோசித்தன. இந்தியா கூட்டணி 295 இடங்களுக்கு மேல் வெற்றி பெறும் என காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

கருத்துக் கணிப்புகள் குறித்துப் பேசிய காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, “இது மோதி மீடியாக்களின் கருத்துக்கணிப்பு” என்று கூறியுள்ளார். கருத்துக் கணிப்புகள் குறித்து காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியிடம் செய்தியாளர்கள் கேட்டபோது, “இதன் பெயர் கருத்துக் கணிப்பு அல்ல, இது மோதி மீடியாக்களின் கருத்துக் கணிப்பு, இது மோதிஜியின் கருத்துக் கணிப்பு, அவரது கற்பனைக் கருத்துக்கணிப்பு” என்றார்.

இந்தியா கூட்டணிக்கு எத்தனை இடங்கள் கிடைக்கும் என்று ராகுல் காந்தியிடம் பத்திரிக்கையாளர்கள் கேட்டதற்கு, “சித்து மூஸ்வாலாவின் பாடலைக் கேட்டது உண்டா- 295” என்றார்.

மறைந்த பஞ்சாப் மாநிலப் பாடகர் சித்து மூஸ்வாலா ‘295’ என்ற பாடலை வெளியிட்டிருந்தார். அதைச் சுட்டிக்காட்டியே இந்தியா கூட்டணி 295 இடங்களைப் பெறும் என்று ராகுல் காந்தி கூறினார்.

# நாடு திரும்பிய 5 ஆண்கள் கைது

கைது செய்யப்பட்டவர்கள் மன்னார் தாழ்வுபாடு, தலைமன்னார், வவுனியா, கிளிநொச்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 37,39,24,26 மற்றும் 38 வயதுடைய ஆண்கள் என தெரிய வந்துள்ளது.

குறித்த 5 பேரும் இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு கடந்த சில வருடங்களுக்கு முன் சென்றுள்ள நிலையில் இந்தியாவின் பல்வேறு இடங்களில் வசித்து வந்துள்ளனர்.

இந்நிலையிலே குறித்த 5 பேரும் படகு மூலம் இந்தியாவில் இருந்து சட்ட விரோதமான முறையில் தலைமன்னார் ஊர்மனை பகுதிக்கு வருகை தந்த நிலையில் திங்கட்கிழமை(3) காலை தலைமன்னார் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட குறித்த 5 சந்தேக நபர்கள் தற்போது தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருவதோடு,விசாரணைகளின் பின்னர் குறித்த நபர்கள் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 3 பாடங்களிலும் 27,000 பேர் சித்தியடையவில்லை

விண்ணப்பித்தவர்களில் 173,444 பேர் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றுள்ளதாகவும் இது 64.33 வீதமாகும் எனவும் தெரிவித்தார்.

மூன்று பாடங்களிலும் 10,484 பரீட்சார்த்திகள் சித்தியடைந்துள்ளதாகவும், இது 3.9 வீதமாகும் எனவும் ஜெயசுந்தர தெரிவித்தார்.

இவ்வருடம் பரீட்சைக்குத் தோற்றிய 190 விண்ணப்பதாரர்களின் பெறுபேறுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களில் 146 தனியார் விண்ணப்பதாரர்களும் 44 பாடசாலை விண்ணப்பதாரர்களும் உள்ளதாகவும் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார் .

2023 உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் ஆண் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை வீழ்ச்சியையும் பெண் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை அதிகரிப்பையும் காட்டுவதாகவும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

மேலும், பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களில் 27,000 பேர் மூன்று பாடங்களிலும் சித்தியடையாமை இலங்கைக் கல்வி முறைமையில் பாரிய பின்னடைவை காட்டுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உயர்தர மீள் கணக்கெடுப்பு நடவடிக்கைகளுக்காக பரீட்சை திணைக்களத்தின் ஒன்லைன் முறையானது ஜூன் மாதம் 5 ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை திறக்கப்படும் எனவும் பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

உயர்தரப் பரீட்சையில் நாடளாவிய ரீதியில் 229,057 பாடசாலை பரீட்சார்த்திகள் தோற்றியுள்ளதோடு 40,556 தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விசேட விடுமுறை




ஏனைய மாகாணங்கள் மற்றும் பிராந்தியங்களில் உள்ள பாடசாலைகளுக்கும் விசேட விடுமுறை தினமாக வழங்கப்படாது என தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்த மாகாணங்களில் வழக்கம் போல் பாடசாலை நடைபெறும்.

1. சப்ரகமுவ மாகாணம்
   - இரத்தினபுரி மாவட்டம் - அனைத்து பாடசாலைகளும்
   - கேகாலை மாவட்டம் - அனைத்து பாடசாலைகளும்
2. தென் மாகாணம்
   - காலி மாவட்டம் - அனைத்து பாடசாலைகளும்
   - மாத்தறை மாவட்டம் - அனைத்து ப பாடசாலைகளும்
3. மேல் மாகாணம்
   - களுத்துறை மாவட்டம் - அனைத்து பாடசாலைகளும்
   - கொழும்பு மாவட்டம் - ஹோமாகம வலய பாடசாலைகள்

இங்கு குறிப்பிடப்படாத அனைத்து மாகாணங்களிலும் மாவட்டங்களிலும் பிராந்தியங்களிலும் பாடசாலைகள் செவ்வாய்க்கிழமை (04) அன்று வழக்கம் போல் நடைபெறும். நிலவும் வானிலையின் அடிப்படையில், மாகாண வலய பணிப்பாளர்களினால் பாடசாலைகளை நடத்துவது தொடர்பில் முடிவுகள் எடுக்கப்படும் என்றும் கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

# ‘கோழி கிடைத்தால் புரியாணி போடுங்கள்”

வருவார் என்று தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

இப்படி எமது கடும் உழைப்பினால் தமிழ் பிரதிநிதித்துவங்களை நமது இனம் பெறுகின்ற சூழல் கூடி வரும் போது, நாய், நரி, பூனை, யானை, காகம், குருவி, கோழி சின்னங்களை தூக்கி கொண்டு வந்து தமிழ் வாக்குகளை சிதறடிக்க இப்போதே சிலர் திட்டம் போடுகிறார்கள். துரோகிகளான இவர்கள் தலைகளில் இடிதான் விழ வேண்டும். நாய், நரி, பூனை, காகம், குருவி வந்தால் விரட்டி விடுங்கள். கோழி கிடைத்தால் பிடித்து புரியாணி போடுங்கள் என்றார்.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் பங்காளி கட்சியான ஜனநாயக மக்கள் முன்னணியின் இரத்தினபுரி மாவட்ட கட்டமைப்பு மாநாடு, மாவட்ட அமைப்பாளர் சந்திரகுமார் ஏற்பாட்டில், இரத்தினபுரி நகரசபை மண்டபத்தில் தலைவர் மனோ கணேசன் தலைமையில் நடை பெற்றது இதில் தலைமை உரை ஆற்றிய மனோ எம்பி மேலும் கூறியதாவது,

எனது எம்பிக்கள் அவ்வந்த மாவட்டங்களில் வாழும் மண்ணின் மைந்தர்களாக இருக்க்க வேண்டும். தமிழ் மொழியுடன் சிங்களமும் பேச வேண்டும். எமது துன்பம், துயரம், கஷ்டம், கண்ணீர் ஆகியவற்றை சிங்கள மொழியில் நாட்டுக்கு கேட்கும் விதமாக அவர்கள் உரக்க கூற வேண்டும். நான் அதைதானே செய்கிறேன்? அப்படிதான் எங்கள் எம்பிக்கள் இருக்க வேண்டும் என்பது என் கொள்கை. அதைதான் வேலுகுமார் செய்கிறார். எங்கள் மாவட்ட அமைப்பாளர்கள் இரத்தினபுரி சந்திர குமார், கேகாலை பரணிதரன், கம்பஹா சசி குமார், கொழும்பு பாலசுரேஷ், களுத்துறை அன்டன் ஜெயசீலன் ஆகியோர் செய்வார்கள்.

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் நுவரெலியாவில், வடக்கில், கிழக்கில் பிரச்சினை இல்லை. ஆனால், நாம் சிறுபான்மையாக வாழும் கேகாலை, இரத்தினபுரி, கண்டி, கம்பஹா, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் நிலைமை சவால் மிக்கது. இம்மாவட்டங்களில் எமது கடும் முயற்சியால் தமிழ் பிரதிநிதித்துவங்களை எமது இனம் பெறுகின்ற சூழல் கூடி வரும் போது, தமிழ் வாக்குகளை சிதறடிக்க இப்போதே சிலர் திட்டம் போடுகிறார்கள் என்றார்.

# தேர்தல்களை பிற்போடு முயற்சிகளுக்கு எதிர்ப்பு

தேர்தல்களை பிற்போடுவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து சிவில் சமூகத்தை சேர்ந்தவர்கள் கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்திடம் கடிதமொன்றை கையளித்துள்ளனர்.

பொது, ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பில் சர்வஜனவாக்கெடுப்பை நடத்துவது குறித்து ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்க பண்டார தெரிவித்துள்ளதை தங்கள் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ள சிவில்சமூக பிரதிநிதிகள் அக்கருத்தினை ஜனநாயக விரோத கருத்து என குறிப்பிட்டுள்ளனர்.

மக்கள் போராட்ட பிரஜைகள் அமைப்பு தேசிய சிவில் அமைப்புகளின் முன்னணி மின்சார பாவனையாளர்கள் சங்கம் உட்பட பல அமைப்புகள் இணைந்து இந்த கடிதத்தை இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் அலுவலகத்திடம் கையளித்துள்ளனர்.

ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் மே 28ம் திகதி வெளியிட்டுள்ள கருத்துக்கள் இலங்கை மக்களின் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக தங்கள் கடிதத்தில் தெரிவித்துள்ள சிவில் சமூக பிரதிநிதிகள் இதன் காரணமாக சமூகத்தில் மிகவும் முரணாண நிலை தோன்றியுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளனர். தேர்தல்களிற்காக காத்திருக்கும் மக்களிற்கு ஐக்கிய தேசிய கட்சியின் செயலாளரின் தெரிவித்துள்ள விடயம் மிகவும் பாரதூரமானது எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கையின் ஜனநாயகம் குறித்து நம்பகதன்மைமிக்க பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றதாக பொதுமக்கள் கருதுகின்றனர் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# “அரசாங்கமே ஆள்கிறது”

பக்டீரியா தொற்றுகளைத் தடுக்கும் Meropenem என்ற தடுப்பூசி 2022 நவம்பரில் நாட்டில் கையிருப்பில் இல்லை எனக் கூறி, அவரச கொள்முதல் முறையின் மூலம் 450,000 தடுப்பூசி குப்பிகளை கொள்வனவு செய்யப்பட்டது. இதன் மூலம் நாட்டுக்கு முப்பத்தாறு கோடி எண்பத்தி ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை கூறுகிறது. இது நாட்டின் வளங்களை பட்டப்பகலில் திருடும் செயலாகும் என்றார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 218 ஆவது கட்டமாக 1,177,000 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், அம்பாறை, தெஹியத்தகண்டிய, சந்துன்புர தேசிய பாடசாலைக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு திங்கட்கிழமை (03) ஆம் திகதி இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

488,590 தடுப்பூசிகள் அன்று கையிருப்பில் இருந்தன. ஒரு குப்பியும் இல்லை என கூறி, அவரச கொள்முதல் மூலம் தான் இந்தப் புதிய பங்கு பெறப்பட்டுள்ளது. ஒரு குப்பி ரூ.1,075 க்கு கிடைத்தும், ரூ.1,895 க்கு இது கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

விவசாயம், வியாபாரம் மற்றும் தொழில் முயற்சியாண்மைகள் வீழ்ச்சியடைந்துள்ள வங்குரோத்தான நாட்டில் கூட தடுப்பூசி குப்பிகளில் இருந்து கமிஷன் பெற்றுள்ளனர். இந்த ஊழல் செயற்பாட்டை முன்னெடுத்த முன்னாள் அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை ஐக்கிய மக்கள் சக்தி கொண்டுவந்தது. இதில் அவரைப் பாதுகாக்க 113 பேர் கைகோர்த்திருந்தனர். அவர்கள் தவறான விடயத்துக்கு கைகளை உயர்த்தி, ஆதரித்து திருட்டு, இலஞ்சம், ஊழல் ஆகியவற்றைப் பாதுகாத்து வருகின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் இங்கு தெரிவித்தார்.



இந்தத் தடுப்பூசிகளுக்குப் பயன்படுத்தப்பட்ட அதிகப்படியான நிதியை ஸ்மார்ட் வகுப்பறைகளை திறந்து வைக்க பயன்படுத்தியிருக்காலம். ஏமாற்றும் பொய்யுமே நாட்டில் 24 மணி நேரமும் நடந்து வருகிறது. 220 இலட்சம் மக்களும் முட்டாள்கள் என்றே ஆட்சியாளர்களால் கணக்கிட்டு நடந்து வருகின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

# பொது வேட்பாளருக்கு 3 அமைப்புகள் ஆதரவு

எஸ்.தில்லைநாதன்

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் முடிவுக்கு மேலும் மூன்று அமைப்புகள் பூரண ஆதரவு வழங்கியுள்ளன.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம், சாவகச்சேரி கூட்டுறவு சபை, யாழ். மாவட்ட பாரவூர்திகள் சங்கம் ஆகிய பொதுஅமைப்புகள் தமது பூரண ஆதரவை வெளிப்படுத்தியுள்ளன.

சிவில் சமூக கூட்டிணைவு செயல்பாட்டாளர்கள் நடத்தி வரும் சந்திப்புகளின் தொடர்ச்சியாக குறித்த அமைப்புகளின் தலைவர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள் மற்றும் உறுப்பினர்களுடனான நேரடி சந்திப்பும் கலந்துரையாடலும் அமைப்புகளின் பணிமனைகளில் நடைபெற்றன.




சாவகச்சேரியிலும், கோண்டாவிலிலும் நடைபெற்ற சந்திப்புகளில் தமிழ் பொது வேட்பாளருக்கு தமது பூரண ஆதரவை வழங்கியுள்ள இந்த அமைப்புகளின் பிரதிநிதிகள் குறித்த விடயம் வெற்றிபெறுவதற்கு தாம் பூரண ஒத்துழைப்புகளை வழங்க தயாராக உள்ளனர் என்றும் சந்திப்பில் கலந்து கொண்ட சிவில் சமூக பிரதிநிதிகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களிடம் தெரிவித்தனர்.

# சீமெந்து குறைந்தது: லிட்ரோ குறைகிறது

அதிகபட்ச சில்லறை விலை 2250 ரூபாவாகும் எனவும் சீமெந்து நிறுவனங்கள் மேலும் குறிப்பிடுகின்றன.

இதேவேளை, லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலையை குறைப்பதற்கு அந்த நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது என அறியமுடிகின்றது. அது தொடர்பிலான அறிவிப்பு, இன்று (04) வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# பிட்டகந்தவுக்கு விடிவு

மாத்தளை, ரத்தோட்டை, பிட்டகந்த தோட்ட லயன்களின் கூரைகளை புனரமைக்கும் பணிகள், சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த புனரமைப்பு பணிகளை இரண்டு மாத காலப்பகுதிக்குள் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

இந்தப் பகுதிகளில் வாழும் மக்களின் மிக நீண்ட கால தேவையாக கருதப்படும் மேற்படி வேலைத் திட்டத்தை முன்னெடுத்து தருமாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் விடுத்த வேண்டுகோளுக்கு அமையவே இந்த வேலை திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பின் தங்கிய மற்றும் தோட்டப்புறங்களில் வாழும் மக்களுக்கு தேவையான நிவாரண நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் தங்களுக்கு ஆலோசனைகள் வழங்கியுள்ளதாக சுட்டிக்காட்டி இராஜாங்க அமைச்சர், இதற்கமையவே இந்த வேலை திட்டத்தை சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் ஊடாக இரண்டு மாத காலப்பகுதிக்குள் முன்னெடுக்கப்பட உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.







# தமிழ் அதிபருக்கு விளக்கமறியல்

மதிய உணவுக்கான விலைமனு கோரலை பெற்றுக்கொடுப்பதற்காக, 30 ஆயிரம் ரூபாய் பணத்தை இலஞ்சமாக பெற்றதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட எலியகொட (தமிழ் வித்தியாலயம்) பாடசாலை ஒன்றின் அதிபரை எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே திங்கட்கிழமை (03) உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 21 ஆம் திகதி கைது செய்யப்பட்டு அவிசாவளை நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அதிபரின் விளக்கமறியலே இவ்வாறு நீடிக்கப்பட்டுள்ளது.

விலைமனு கோரலை அனுமதிப்பதற்காக சந்தேகநபர் 30,000 ரூபாவை கேட்டதாகவும், ஆரம்பத்தில் 10 ஆயிரம் ரூபாவை பெற்றுக்கொண்டதாகவும், மீதி 20 ஆயிரம் ரூபாவை பெற்றுக்கொண்ட போதே கைது செய்யப்பட்டதாகவும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் அதிகாரிகள் நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவந்தனர்.

# தாக்குதலுக்கு பின் சடலமாக மீட்பு

கம்பளை, கஹடபிட்டியவில் கடையொன்றின் பணியாற்றிய நிலையில், பத்து நாட்களாக காணாமல் போயிருந்த 21 வயதுடைய இளைஞன் விக்டோரியா நீர்த்தேக்கத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக கம்பளை பொலிஸார்தெரிவித்துள்ளனர்.



கம்பளை, கஹடபிட்டிய பகுதியைச் சேர்ந்த மொஹமட் ஹசன் ராஷிக் என்ற இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த ஆறு வருடங்களாக குறித்த கடையில் பணியாற்றி வந்ததாகவும், களஞ்சியசாலையில் இருந்து எதையோ திருடிச் சென்றதால் கடை உரிமையாளரும், அவரது மகனும், இன்னும் சிலருடன் இணைந்து இளைஞனை தாக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதல் நடத்தப்பட்ட மறுநாளிலிருந்து இளைஞன் வீட்டுக்கு வராததால், இளைஞனின் தாயார் இது தொடர்பில் கடந்த 22ஆம் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். இச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் நிலையிலேயே, இளைஞனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

# ரயில் எஞ்ஜின் தீப்பிடித்தது



கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து பதுளையை நோக்கி பயணித்த பொடிமெனிக்கே ரயிலின் எஞ்சின், ஹப்புத்தளை ரயில் நிலையத்தில் வைத்து திங்கட்கிழமை (03) தீப்பிடித்துள்ளது.
தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நடவடிக்கையை ரயில்வே திணைக்களத்தினர், தீயணைப்பு பிரிவினர் மேற்கொண்டிருந்தனர்.

# நியமனம்

எஸ்.மௌலானா

ஐக்கிய தேசியக் கட்சியின் மருதமுனை 04 ஆம் 05 ஆம் வட்டாரங்களுக்கான அமைப்பாளராக டிலிப் நௌஷாட் அபூபக்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் ஞாயிற்றுக்கிழமை (02) இடம்பெற்ற கட்சி உத்தியோகத்தர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வின்போது கட்சியின் தலைவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவருக்கான நியமனக் கடிதத்தை வழங்கி வைத்துள்ளார்.



# களத்துக்கு பிரதமர் தினேஷ் விஜயம்

கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அவிசாவளை, புவக்பிட்டிய உள்ளிட்ட பல பகுதிகளுக்கு பிரதமர் தினேஷ் குணவர்தன திங்கட்கிழமை (03) விஜயம் செய்தார். இதில், பாராளுமன்ற உறுப்பினர் யதாமினி குணவர்தன, அரச அதிகாரிகள் உள்ளிட்டோரும் கலந்துகொண்டிருந்தனர்.





# நாய் கோப்பையில் பேத்திக்கு உணவு

## 73 வயதான பாட்டி கைது

தனது வீட்டில் வளர்க்கும் செல்லப்பிராணிகளில் ஒன்றான நாய்க்கு உணவு வைக்கும் கோப்பையில் தன்னுடைய பேத்திக்கு, உணவு கொடுத்தார் என்றக் குற்றச்சாட்டின் கீழ், அந்த பேத்தியின் பாட்டி கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் வெயாங்கொட வதுரவ எனுமிடத்திலேயே இடம்பெற்றுள்ளது.

பெற்றோர் இன்மையால் சிறு வயது முதல் சிறுவர் அபிவிருத்தி மத்திய நிலையத்தில் வளர்ந்து தற்போது 14 வயது சிறுமியானதன் பின்னர், தன்னுடைய வயோதிப பாட்டியை பார்ப்பதற்காக அச்சிறுமி பாட்டியின் வீட்டுக்கு அண்மையில் சென்றுள்ளார்.

வீட்டுக்குச் சென்ற சிறுமிக்கு, தன்னுடைய வீட்டில் வளர்க்கும் நாய்க்கு உணவளிக்கும் கோப்பையில் உணவை போட்டுக்கொடுத்து, சாப்பிடுமாறு அச்சுறுத்தியது மட்டுமன்றி, தூசணத்தால் பாட்டி தூற்றியுள்ளார். அத்துடன் வீட்டை விட்டு உடனடியாக வெளியேறுமாறும் கத்தியுள்ளார்.

இவ்விவகாரம் பொலிஸாரின் காதுகளுக்குச் சென்றுள்ளது.

இந்நிலையில், தன்னுடைய 14 வயதான பேத்தியை மானப்பங்கம் படுத்தும் வகையில் செயற்பட்டார் என்றக் குற்றச்சாட்டின் கீழ் 73 வயதான வயோதிப பெண்ணை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சிறுமிக்கு மூத்த சகோதரி ஒருவர் இருக்கிறார். எனினும், தன்னுடைய பெற்றோர் தொடர்பில் இவ்விருவருக்கும் எவ்விதமான ஞாபகமும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# வர்த்தகரை காணவில்லை

ஹட்டன் நகரில் வர்த்தகர் ஒருவர் காணாமல் போயுள்ளதாக வர்த்தகரின் மனைவி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.



ஹட்டனில் டன்பார் பகுதியில் கடை ஒன்றை நடத்தி வந்த தனது கணவர் கடந்த (29) முதல் காணாமல் போயுள்ளதாக வர்த்தகரின் மனைவி ஹட்டன் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

ஹட்டன் அபோஸ்லி தோட்டத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஆர்.ரஞ்சித்குமார் (வயது 46) என்பவர் கடந்த மாதம் (29ஆம் திகதி) தனது கடையைத் திறப்பதற்காக வீட்டிலிருந்து வந்தவர், அன்றைய தினம் கடையை திறக்காமல் வீடு திரும்பவில்லை.

காணாமல் போன வர்த்தகர் தொடர்பில் ஹட்டன் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன், குறித்த வர்த்தகர் தொடர்பில் ஏதேனும் தகவல் தெரிந்தால் ஹட்டன் தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகரை 0718591117 என்ற இலக்கத்திற்கு அழைக்குமாறு ஹட்டன் பொலிஸார் கோருகின்றனர்.

# நகரசபை ஊழியர்கள் வேடத்தில் கொள்ளை

செ.திவாகரன்

திம்புள்ள, பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தனி வீடொன்றில் இரண்டு பெண்களின் தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ள சம்பவம் வெள்ளிக்கிழமை (31) பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது.



குறித்த வீட்டில், 80 வயதான வயோதிப பெண்ணொருவரும், 35 வயதுடைய பெண்ணொருவரும் இருந்துள்ளனர். அந்தநேரத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், நகரசபை ஊழியர்கள் என தம்மை அடையாளப்படுத்திக் கொண்டு வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து 8 இலட்சம் ரூபாய் பெறுமதியுடைய இரண்டு தங்க சங்கிலிகளை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

# மாமாவை வெட்டி கொன்ற மருமகன்

ரஸீன் ரஸ்மின்

மாதம்பே, செம்புகட்டிய பிரதேசத்தில் நபர் ஒருவர் அவரது மாமாவை கத்தியால் குத்தி கொலை செய்துள்ளதாக மாதம்பே பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



56 வயதுடைய நரசிம்ம கேசர பண்டாரநாயக்க சாம்சன் ஜயவீர என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சகோதரியின் மகனே இந்த கொலையை செய்துள்ளதாகவும், சந்தேக நபரும் இறந்தவரின் வீட்டிற்கு அருகில் வசித்து வருவதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பழைய தகராறு காரணமாக உயிரிழந்தவருக்கும் சந்தேகநபருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தின் பின்னர் வாளால் வெட்டி கொலை செய்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மாதம்பே பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அலைபேசியை விற்றவரும் வாங்கியவரும் கைது

நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணத்தில் கையடக்கத் தொலைபேசியொன்றை கொள்ளையடித்து சென்று விற்பனை செய்த சம்பவம் தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண நீதிமன்ற வளாகத்திற்கு அருகில் தரித்து நின்ற முச்சக்கர வண்டியின் டாஸ்போட்டில் வைத்து, பூட்டப்பட்ட 1,90,000 ரூபாய் பெறுமதியான கையடக்க தொலைபேசியை துவிச்சக்கர வண்டியில் வந்த மர்ம நபரொருவர் கொள்ளையடித்து சென்றுள்ளார்.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட நிலையில் கண்காணிப்பு கமராவின் காணொளியை அடிப்படையாகக் கொண்டு சந்தேக நபர் மானிப்பாய் சாவல்கட்டு பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் மேற்கொண்ட விசாரணையில் குறித்த சந்தேக நபர் தொலைபேசியை 30,000 ரூபாய் பணத்திற்கு ஆறுகால்மடத்தைச் சேர்ந்த ஒருவருக்கு விற்பனை செய்தமை தெரியவந்துள்ளது. பின்னர் கையடக்கத் தொலைபேசியை வாங்கியவரும் கைது செய்யப்பட்டு, தொலைபேசி மீட்கப்பட்டதாகவும் சந்தேக நபர்கள் இருவரையும் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொலைபேசியை திருடிய நபர் சைக்கிள் திருட்டுகளில் ஆறுமாதகாலம் தண்டனை பெற்று விடுதலையானவர் என பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது .

# மழைக்குப் பின்னரான நோய்களில் இருந்து பாதுகாப்போம்

கோடைகாலம், குளிர் காலம் என ஒவ்வொரு காலத்திற்கும் ஒவ்வொரு விதமான நோய்கள் மனிதனை தாக்கும். மழைக்கால நோய்கள் குறித்தும் அதன் தன்மை குறித்தும் நாம் அறிந்து கொண்டால் நோய்கள் வரும் முன் தடுக்கலாம். நோய் வந்த பின் உரிய சிகிச்சையுடன் பாதுகாப்பாகவும் இருக்கலாம்.

இது ஒரு வகையான வைரஸ் நோய். இருமல், சளி மற்றும் சுவாச கோளாறுகள் ஏற்படும். அதைத் தொடர்ந்து அதிக காய்ச்சல்,தொண்டை வலி, தலைவலி, வாந்தி ஆகிய பாதிப்புகள் ஏற்படும் என்பதை பலரும் அறிந்திருப்பார்கள். ஆகையால், மழைக்குப் பின்னர் மிகவும் கவனமாக இருக்கவேண்டும்.

குடிநீரை நன்றாக கொதிக்க வைத்து ஆறிய பின் அருந்த வேண்டும். பழைய உணவுகள், குளர்ச்சியான உணவு வகைகள் சேர்க்கக்கூடாது. ஈரமான உடைகளை உடனடியாக மாற்ற வேண்டும். குளிர்ந்த நிலையில் வைரஸ் மற்றும் பூஞ்சை தொற்றுகள் ஏற்படும். சளியால் பாதிக்கப்பட்டவர்கள் இருமும் போது கைக்குட்டையால் வாயை மூடி இரும வேண்டும். மழையில் நனைந்தால் தலைக்கு குளித்து விட வேண்டும். உப்பு கலந்த வெந்நீரில் கொப்பளித்தால் நிவாரணம் கிடைக்கும்.

மழைநீர் தேங்குவதால் கொசுக்கள் உற்பத்தி அதிகமாகும். இதனால் டெங்கு, மலேரியா, சிக்குன் குனியா போன்ற காய்ச்சல்கள் வரும். நம் வீட்டை சுற்றி தண்ணீர் தேங்காமல் பார்த்து கொள்ள வேண்டும். குடிநீர் சேகரித்து வைக்கும் தொட்டிகள், பாத்திரங்கள் உள்ளிட்டவற்றை அடிக்கடி சுத்தம்செய்ய வேண்டும். அவை மூடிய நிலையில் இருக்க வேண்டும். கொசுவர்த்தி சுருள், கொசு வலைகள் பயன்படுத்தலாம். குப்பையை தேங்காமல் அப்புறபடுத்த வேண்டும்.

மழைக்காலங்களில் குடிநீருடன் சேர்ந்து மாசுபட்ட நீர் கலப்பதால் சளி,வயிற்றுப்போக்கு, டைபாய்டு காய்ச்சல், மஞ்சள் காமாலை ஆகிய நோய்கள் ஏற்படும். நீண்ட நாள் காய்ச்சல், வயிற்றுவலி, வாந்தி, உடல் தளர்ச்சி.

மஞ்சாள் காமாலை: காய்ச்சல், வாந்தி, உடல் தளர்ச்சி, தலைவலி, மூட்டு வலி, சிறுநீர் மஞ்சளாக கழித்தல் ஆகியன அடங்கும்.

மழைக்காலம் வந்துவிட்டது. மழை பெய்வது பல்வேறு தரப்பினருக்கும் மகிழ்ச்சியான செய்தியாக இருந்தாலும், பெரு நகரங்களில் வசிப்பவர்ளுக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறுகிறது. இந்த காலத்தில் தொடர்ந்து பெய்யும் கனமழையல் பல்வேறு பகுதிகளில் மழை நீர் தேங்குகிறது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுவதோடு, பாக்டீரியா, வைரஸ், பூஞ்சை மற்றும் கொசுக்களின் வளர்ச்சிக்கு தேவையற்ற நோய்களை கொண்டு வருகிறது.

நமது நாட்டை பொறுத்தவரையில், மலைப்பாங்கான பிரதேசங்களிலேயே இம்முறை கடுமையான தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. இதுவரையிலும் 15 பேர் உயிரிழந்து, ஐவர் காணாமல் போயுள்ளனர். 23 பேர் படுகாயமடைந்துள்னர். நாட்டில் சுமார் 20 மாவட்டங்களில் கடந்த சில வாரங்களாக மோசமான வானிலை நிலவுவியது. இதன் தொடர்ச்சியாக அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளன. அதுமட்டுமன்றி தாழ்நில பிரதேசங்களில் வெள்ளநீர் இன்னும் தேங்கியிருக்கின்றது. வெள்ளத்துடன், மலசலக்கூட கழிவுகளும், கழிவு நீர்களும் சேர்ந்துவிடும்.

மழைக்காலங்களில் தொற்றுநோய்களுக்கு அப்பால், கண்கள் சிவந்து, அரிப்பு மற்றும் எரிச்சல் ஏற்படும். பீளை கட்டும், நீர் கசியும், பார்வை பாதிக்காது. பொதுவாக ஒரு வாரத்தில் குணமாகிவிடும். மழைக்காலங்களில் தோல் வியாதிகள் அதிகரிக்கும். பூஞ்சை நோய்கள் மற்றும் காலில் சேற்றுப்புண் உண்டாகும்.தோலில் வறட்சி உண்டாகும். நமது நாட்டை பொறுத்தவரையில், மழை பெய்துகொண்டிருக்கின்றது. அதிலிருந்து மீண்டெழுந்தாலும் மழைக்குப் பின்னரான தொற்று நோய்கள், தொற்றிவிடாமல் தற்பாதுகாத்துக்கொள்வதே சிறந்தது.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

உண்மை பேசாதவர்கள் உளறிக் கொண்டே பேசுவார்கள். அவர்களின் அக உணர்வு உறுத்துவதால் பேச்சு சீராக இருக்காது.

உண்மை பேசுவது கடினமான தே இல்லை. சந்தோஷமான நிலைமையில் மனிதர்களை வைத்திருக்கும். மேலும் அச்சமே இல்லாத நிலையில், இவர்களின் வாழ்க்கையும் அதி உச்சகத்தில் வைத்துவிடும்.

உள்ளம் என்பது கூட உள்; "அகம்" வெளிப்படையாகப் பரந்தநிலையில் எம்மை உருவாக்கியப்படி அமைய வேண்டியதாகக் கருதவேண்டும்.

என்றும் நீதி நெறிதவறாது, உண்மையுடன் வாழ்ப்பாவர்களின் வகதங்களைப் பாருங்கள். அதில் ஓர் அழகு பளிச்செனத் தெரியும். இதுதே ஜஸ் எனப்படும் வியப்பான அழகு நிலை! இது ஒழுக்க வாழ்வின் முழுவடிவமாகும்.

உங்கள் ஜீவ சகியை பெருக்கிட பேசும் வார்த்தைகளில் தெளிவுடன் கூடிய நேர்மை துலங்கவேண்டும். இதனால் நெஞ்சத்தில் குளுமை தோன்றும். அதுவே சக்தியாக உருவாகி காரிய சக்திகளை உருவாக்கிவிடும்.

-பருத்தியூர் பால-வயிரவநாதன்

## முஸ்லிம் அணிகளும்

# களநிலை யதார்த்தங்களை புரிந்து கொள்ளாத நகர்வுகளும்

மொஹமட் பாதுஷா

தேசிய அரசியலைப் போலவே முஸ்லிம் அரசியலிலும் தேர்தலை மையமாகக் கொண்டு கட்சி தாவும் படலமும், ஆட்சேர்க்கும் முயற்சிகளும் ஆரம்பமாகியிருக்கின்றன. ஆனால் தம்முடைய பலம் பலவீனம் பற்றிய கள அறிவின் அடிப்படையில் அவர்கள் நகர்வுகளைச் செய்வதாக தெரியவில்லை. சில நகர்வுகள் கோமாளித்தனமாக உள்ளன.

முஸ்லிம் கட்சிகளுக்குள் உள்ளக முரண்பாடுகள் வலுவடைவதும்,சில முரண்பாடுகள் தணிவடைவதும் உள்ளடங்கலாக அனைத்து விதமான 'சம்பவங்களும்' நூறு வீதம் அடுத்து நடைபெறவுள்ள இரு தேர்தல்களை மையமாகக் கொண்டே இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

மாகாண, உள்ளூராட்சிமன்ற தேர்தல்கள் இன்மையால், முஸ்லிம் கட்சிகளும் அரசியல்வாதிகளும் தமது பலத்தை உரசிப் பார்ப்பதற்கான சந்தர்ப்பம் அண்மைக்காலத்தில் கிடைக்கவில்லை.

முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளை பற்றிச் சிந்திக்காமல் தமது கல்லாப் பெட்டிகளில் மட்டும் குறியாக இருந்த முஸ்லிம் அரசியல்வாதிகள், ஆழ்ந்த உறக்கத்தில் இருந்து இப்போதுதான் கண்விழித்துள்ளார்கள்.

மக்களுக்கு எதுவுமே செய்யாமல், அவர்கள் தம்மோடு இருக்கின்றார்கள் என்ற ஒரு மாயையில் மூழ்கிக் கிடந்த அரசியல் தலைவர்கள், தளபதிகளுக்கு உள்ளுக்குள் தோல்விப் பயம் எடுத்துள்ளது. ஜனாதிபதித் தேர்தல் முதலில் நடைபெறும் என்பதால் அந்த உதறல் வெளியில் தெரியாமல் இருக்கின்றது. அவ்வளவுதான்.

முஸ்லிம் கட்சித் தலைவர்களான றவூப் ஹக்கீம், றிசாட் பதியுதீன் போன்றோர் பெரும்பாலும் கட்சியின் வெற்றி பற்றிச் சிந்திக்கின்றனர். அடுத்ததாக ஜனாதிபதித் தேர்தல்தான் நடைபெற்றாலும் அதற்குப் பிறகு நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை நோக்கி இப்போதே கட்சியின் வாக்குவங்கியையும் சரிசெய்ய அவர்கள் முற்படுகின்றனர்.

ஆனால், றவூப் ஹக்கீம் ஒரு குறிப்பிட்ட பெரும்பான்மைக் கட்சியின் கம்பளைத் தொகுதி அமைப்பாளராக இருந்து கொண்டு, கிழக்கில் எப்படி முஸ்லிம் காங்கிரஸை சந்தைப்படுத்தப் போகின்றார் என்பதுதான் தெரியவில்லை.

ஆக, அவர் உள்ளடங்கலாக தற்போது எம்.பி.க்களாக இருப்பவர்களுக்கும், முஸ்லிம் கட்சிகளில் ஏற்கனவே மாகாண சபை உறுப்பினர்களாக பதவி வகித்தவர்களுக்கும் தமது சொந்த வெற்றிதான் முழுமுதல் இலக்காக உள்ளது.

மறுபுறத்தில், எம்.பியாக இருந்து புளித்துப்போன, தோல்வியடையக் கூடிய அல்லது தலைவருடன் இணங்கிப் போகாத அரசியல்வாதிகளை ஓரம் கட்டுவதற்கு தலைவர்கள் முயற்சிக்கின்றனர்.

இரு பிரதான முஸ்லிம் கட்சிகளுக்குள்ளும் இந்நிலைமை காணப்படுகின்றது என்றாலும் முஸ்லிம் காங்கிரஸிற்குள் உள்ளக முரண்பாடுகள் அதிகமுள்ளன. ஒவ்வொரு ஊரிலும் மு.கா. வுக்கும் ம.கா.வுக்கும் பல அணிகள், பிளவுபட்ட குழுக்கள் உள்ளன. ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தில் பயன்பெறும் அல்லது தலைவரால் பயன்படுத்தப்படும்.

முஸ்லிம் காங்கிரஸைப் பொறுத்தவரை அந்தக் கட்சி அடிப்படையில் நல்லதொரு கட்டமைப்பை கொண்டதாகும். மறைந்த தலைவர் அஷ்ரபையும் மரத்தையும் கட்சி கீதத்தையும் பயன்படுத்தியே தேர்தலில் வெற்றி பெறும் நிலை இருந்ததை யாரும் மறுக்க முடியாது. அந்தளவுக்கு மு.கா. என்ற 'வர்த்தக நாமம்' கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

இதைவிடுத்து தற்போதைய தலைவருக்காக கட்சிக்கு வாக்களித்தல் என்பது மிகக் குறைவாகும். ஆவர் மீது பல விமர்சனங்கள் உள்ளன. பல விவகாரங்களில் குறிப்பாக கிழக்கு மக்களிடையே அதிருப்தி உள்ளது.

இந்தப் பின்னணியில் மு.கா. என்ற வட்டத்தை விட்டு வெளியேற முனைகின்ற முஸ்லிம் அரசியல்வாதிகள் வெற்றி பெறுவது என்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல.

இருப்பினும் கட்சிக்காக - பாட்டுக்காக வாக்களிக்கும் மக்களின் மனப்பாங்கு மாறி வருகின்ற சூழலில், தலைவருடன் சேர்ந்தியங்காவிட்டால் கூட தனக்கு கிடைத்த பதவி ஊடாக தனித்து நின்று மிகச் சிறப்பாக மக்களுக்குச் சேவையாற்றிய யாராவது இருந்தால் அவர்களுக்கு வெற்றி சாத்தியப்படலாம்.

இதேவேளை, மக்கள் காங்கிரஸின் நிலைமை வேறு விதமானது அதாவது அக் கட்சிக்கு அடிப்படையிவ் ஒரு சிறந்த கட்டமைப்பு இல்லை. அதனை உருவாக்கும் முயற்சிகளும் பெரியளவில் பயனளிக்கவில்லை. இதனால் தலைவர் றிசாட் பதியுதீனை மையமாகக் கொண்ட ஒரு கட்சியாக இது உள்ளது எனலாம்.

மக்கள் காங்கிரஸ் கட்சி பற்றி பெரிய பிம்பங்கள் மக்களிடையே இல்லை. இருப்பினும் தலைவர் றிசாட் பற்றி ஒப்பீட்டளவில் கொஞ்சம் சாதகமான அபிப்பிராயமும் சிறிய அனுதாபமும் உள்ளதெனலாம்.

தேசிய காங்கிரஸின் நிலையும் இதுதான். தலைவர் ஏ.எல்.எம்.அதாவுல்லாவின் தனிஆள் அரசியலே கட்சி அரசியலாக உள்ளது. அவர் கட்சியை வளர்க்க செலவளிக்கவில்லை என்பதுடன் ஒரு கட்டம் வரைக்கும் தனது இடத்தில் இருந்து இறங்கி வந்து, மக்களை வசீகரிக்கும் அரசியலைச் செய்யவும், காலத்திற்கு ஏற்ப நிலைப்பாடுகளை எடுக்கவும் இல்லை என்று கூறலாம்.

இவ்வாறான யதார்த்தங்களையும் கட்சியின் பலம், பலவீனங்களையும் புரிந்து கொள்ளாமலேயே முஸ்லிம் தலைவர்களும் கட்சிகளும் தற்போது நகர்வுகளைச் செய்து கொண்டிருப்பதாக தெரிகின்றது.

ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடைபெறும் என்பதால், தனிப்பட்ட முஸ்லிம் அரசியல்வாதிகள் இத்தேர்தல் முடிவு வரும் வரைக்கும் மதில்மேல் பூனையாகவே இருப்பார்கள். இப்போது யாரிடம் நிதி பெற்றாலும், அபிவிருத்திகளை பெற்றுக் வந்தாலும், அடுத்ததாக யார் ஜனாதிபதியாக வருகின்றார்களோ அவரின் பக்கமே பெரும்பாலான முஸ்லிம் அரசியல்வாதிகள் நிற்பார்கள். அதற்காக அவர்கள் வெட்கப்படப் போவதில்லை.

இருப்பினும், அண்மைக்காலமாக தோல்விப் பயத்தில் அவர்கள் ஓடித் திரிவதைக் நன்றாகவே அவதானிக்க முடிகின்றது. என்ன செய்தாவது எந்த அணியுடன் சேர்ந்தாவது எவ்வளவு செலவு செய்தாவது இந்த முறை முயற்சி செய்து பார்க்க அவர்கள் முற்படுகின்றனர். .

இதேவேளை, முஸ்லிம் கட்சிகள் இப்போதிருந்தே தமது தளங்களைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. ஜனாதிபதித் தேர்தலிலே தமது வாக்குவங்கிகளை காப்பாற்றினாலேயே தலைவர்களும் கட்சியும் மதிக்கப்படும். அடுத்துவரும் பொதுத் தேர்தலை இலகுவாக எதிர்கொள்ளலாம் என்ற நிலைமை உள்ளது.

ஆதலால்,முஸ்லிம் கடசிகள் மற்றும் அரசியல் அணிகளின் தலைவர்கள் தீயாய் வேலை செய்யத் தொடங்கியுள்ளனர்.

மு.கா. தலைவர் தமது எம்.பி.க்களை,கட்சி முக்கியஸ்தர்களை நிழல் களத்தில் எதிர்த்தாடுகின்றார். அவர்களை அரவணைக்கும் தோரணையில் செயற்படுகின்றார். சரிவராவிட்டால் கழற்றி விடும் எண்ணமும் அவருக்கு இருக்கலாம்.

இந்தப் பின்னணியில், கட்சிக்கு ஆள்சேர்க்கும் படலங்கள் ஆரம்பமாகியுள்ளன. ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் நேரத்தில் பல்டி அடிக்கும் போக்கை அதிகம் காணக் கிடைக்கும். ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு சாதகமான பக்கத்திற்கு முஸ்லிம் அரசியல்வாதிகளின் குரங்குத்தனங்கள் மேலும் வெளிப்படும். ஒருவேளை கட்சிகளே இவ்வாறு தாவினாலும் ஆச்சரிப்படுவதற்கில்லை.

ஒரு காலத்தில் அஷ்ரபிற்காக, மரத்திற்காக, கட்சிக்காக வாக்களித்தது போலஉபவ் இப்போது தனிப்பட்ட கட்சிக்காகவோ அல்லது குறிப்பிட்ட அரசியல்வாதிகளுக்காகவோ மக்கள் வாக்களிப்பதில்லை. அந்தக் காலம் மலையேறிவிட்டது.

நிலைமை இப்படியிருக்க சில நூறு வாக்குகளைக் கூட பெற முடியாதவர்களை முஸ்லிம் கட்சிகள் தமது கட்சிக்குள் இணைக்கத் தொடங்கியுள்ளன. ஏதோ பல்லாயிரம் வாக்குகள் பெறுவார் என்ற படம் காட்டப்படுகின்றது. முஸ்லிம் அரசியல் களநிலையின் பலம், பலவீனம் பற்றிய களஅறிவு அற்றவர்களாக தலைவர்கள் இருப்பதற்கு இதுவும் ஓர் உதாரணம் எனலாம்.

ஊருக்கு எம்.பி வேண்டும் என்பதற்காக, இருக்கின்ற பேய்களில் சிறந்த பேய் என்பதற்காக, இருக்கின்ற கள்வர்களில் சிறிய கள்வர் என்பதற்காக, வாக்கை யாருக்காவது அளிக்க வேண்டும் என்பதற்காக, அவர்கள் தருகின்ற சிறுதொகை பணம் மற்றும் உலருணவுப் பொருட்களுக்காகவே அதிகமான வாக்குகள் அளிக்கப்படுகின்றன.

ஒரு அரசியல்வாதி தனக்கு, தனது குடும்பத்திற்கு செய்த உதவிக்காக வாக்களிக்கின்ற முஸ்லிம்கள் சிலர் இருக்கலாம். ஆனால் மூகத்திற்கு செய்த சேவைக்காகவோ, பெற்றுத்தந்த உரிமைக்காகவோ வாக்களிக்கின்ற அல்லது சமூகத்திற்கு இழைத்த துரோகங்களுக்காக குறிப்பிட்ட அரசியல்வாதியை தோற்கடிக்கின்ற முஸ்லிம் வாக்காளர்கள் மிகக் குறைவாகும்.

## கடிதங்கள்

### பஸ் இன்மையால் அவதி

நாவலப்பிட்டி- கடியன்லேன தலவாக்கலை வீதியில் சேவையில் ஈடுபட்டு வந்த நாவலப்பிட்டி நகரில் இருந்து காலை 6.30 மணிக்கு புறப்படும் இலங்கை போக்குவரத்து சபை பஸ் கடந்த வாரங்களில் இருந்து சேவையில் இல்லாமையால் பலரும் பெரும் அசௌகரியத்தை எதிர்நோக்குகிறார்கள்.

இந்த பஸ் சேவையை நம்பியே நூற்றுக்கு மேற்பட்ட பயணிகள் இவ் வழியே பயணத்தை மேற்கொள்கிறார்கள். பாடசாலை மாணவர்களும் பெரும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனார்.



நாவலப்பிட்டி பஸ் டிப்போவினால் நிர்வகிக்கப்படும் இப் பஸ் சேவை குறித்து டிப்போ தரப்பினருக்க எடுத்துரைத்த போதிலும் பொருத்தமான நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் பயணிகள் கடும் விசனம் தெரிவிக்கிறார்கள்.

இந்த வீதியில் சேவையில் ஈடுபட்டிருந்த சாரதி சேவையில் இருந்த போது இறந்தமை குறிப்பிடத்தக்கது. அதன் பின்னரே இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ள பயணிகள், மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு உரிய தரப்பினருக்கு வலியுறுத்தியுள்ளனர்.





# இலங்கையில் 'செரண்டிப்' கோதுமை மா ஆலை



டுபாயைத் தலைமையகமாகக் கொண்ட ஐக்கிய அரபு இராச்சியத்தில் உள்ள முன்னணி பல்வகை குடும்ப வணிகங்களில் ஒன்றான *Al Ghurair* நிறுவனத்தின் முழு உரிமையைக் கொண்ட உபநிறுவனமான செரண்டிப் கோதுமை மா ஆலை நிறுவனம் (SFML) கொழும்பு துறைமுகத்தில் உள்ள தனது அதிநவீன ஆலையில் ஊடகவியலாளர்களுக்கான விசேட சுற்றுப்பயணமொன்றை செவ்வாய்க்கிழமை (28) ஏற்பாடு செய்திருந்தது.

இந்தச் சுற்றுப் பயணத்தின் ஊடாக இலங்கையின் உணவுப் பாதுகாப்பு, கோதுமை தயாரிப்புத்தொழில்துறையில் புதிய கண்டுபிடிப்புக்கள் மற்றும் நிலைபேறு தன்மையை மேம்படுத்துவதில் செரண்டிப் கோதுமை ஆலை நிறுவனம் கொண்டிருக்கும் அர்ப்பணிப்பு வெளிப்பட்டது.

'நாட்டுக்கு ஊட்டமளித்தல்' என்ற பரந்த நோக்கத்தின் அடிப்படையில் செற்பட்டுவரும் செரண்டிப் கோதுமை மா ஆலை நிறுவனம், கடந்த 15 வருடங்களாக இலங்கையின் உணவுத் தொழில்துறையின் நம்பிக்கை பெற்ற நிறுவனமாக விளங்குகின்றது.

அதிநவீன சுவிஸ் பேக்ளர் (*Siss Buhler*) தொழில்நுட்பத்தின் பயன்பாடு, சிறந்த தரம்மிக்க கோதுமை மாவை விநியோகித்தல் மற்றும் இலங்கையின் சந்தைக்கு புதிய கண்டுபிடிப்புக்களை அறிமுகப்படுத்துவது என்பன செரண்டிப் கோதுமை மா ஆலை நிறுவனம் கொண்டிருக்கும் அர்ப்பணிப்புக்கு சிறந்த எடுத்துக்காட்டுக்களாக அமைகின்றன.

இந்நிறுவனத்தின் 20ற்கும் மேற்பட்ட வகைகளைக் கொண்ட கோதுமை மா தயாரிப்புக்கள் சிறிய பேக்கரித் தயாரிப்பாளர்கள் முதல் பாரிய அளவிலான உற்பத்தியாளர்கள் வரை பயன்படுத்தப்பட்டுவருவதுடன், வீட்டுப் பாவனையாளர்களாலும் பயன்படுத்தப்படுகின்றன.

பேக்கரி உற்பத்திகளுக்கான தனது முன்னணி கோதுமை மா தயாரிப்புக்களின் புதிய இணைப்பாக பெருந்தோட்ட சமூகத்துக்கான வலுவூட்டப்பட்ட அதி சக்தி கோதுமை மா மற்றும் தொற்றா நோய்களை நிவர்த்தி செய்வதற்கான ஃபைபர் பிளஸ் போன்றவை உள்ளடங்குகின்றன.

பெறுமதி சேர்க்கப்பட்ட இந்தத் தயாரிப்புக்கள் இலங்கையின் உணவுச் சூழலை மேம்படுத்துவதற்கும், ஆரோக்கியமான தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கும் கணிசமான பங்களிப்பை வழங்குகின்றன.

நிலைபேறுதன்மை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு முன்னுரிமையளிக்கும் வகையில் செரண்டிப் கோதுமை மா நிறுவனத்தின் யெற்பாடுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. சுற்றுச்சூழல் நிலைபேறுதன்மைக்கு கணிசமான பங்களிப்பைச் செலுத்தும் நோக்கில் பாரிய தொழில்துறை வாடிக்கையாளர்களுக்கு *tanker silo* செயற்பாடுகளை வழங்கி எரிசக்தி நுகர்வு மற்றும் பணியாளர் தேவையைக் குறைத்து, நிலப்பரப்புக் கழிவுகளை குறைக்கும் வகையில் இந்நிறுவனம் இயங்கி வருகின்றது.

இலங்கையின் உணவுப் பாதுகாப்பைப் பேணுவதற்கான தனது அர்ப்பணிப்பை வெளிக்காட்டும் வகையில், வருடம் முழுவதும் தடைப்படாத விநியோகத்தை உறுதிசெய்வதற்காக செரண்டிப் கோதுமை மா ஆலை நிறுவனம் எப்பொழுதும் மூன்று மாதங்களுக்குத் தேவையான கோதுமை இருப்புத் தொகையைப் பேணி வருகின்றது.

நிறுவனத்தினால் முகாமைத்துவம் செய்யப்படும் ஐந்து களஞ்சியங்கள் மூலோபாய ரீதியில் நாடு முழுவதிலும் அமைந்திருப்பதுடன், இதன் ஊடாக செரண்டிப் கோதுமை ஆலை நிறுவனம் தனது உற்பத்தி நாடு முழுவதிலும் கிடைக்கப் பெறுவதை உறுதிசெய்கின்றது.

செரண்டிப் கோதுமை மா ஆலை நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி விஜய் ஷர்மா குறிப்பிடுகையில், "நிலைபேறான மற்றும் புதிய கண்டுபிடிப்புக்களுடன் கூடிய உணவுத் தீர்வுகள் மூலம் இலங்கை முழுவதிலுமுள்ளவர்களை ஊட்டமளிப்பதற்கு நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம்.

நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது மற்றும் கூட்டுப்பொறுப்பின் உயர் தரத்தை நிலைநாட்டி எமது தேசத்தின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் நம்பிக்கையுள்ள பங்காளராக விளங்குவதுமே எமது நோக்கமாகும்"என்றார்.

செரண்டிப் கோதுமை மா ஆலை நிறுவனம் தனது கோதுமை தயாரிப்புக்களுக்கு அப்பால் சமூகப் பொறுப்பு மிக்க முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளது. முதியோர் இல்லங்களில் உள்ள சிரேஷ்ட பிரஜைகள் எசல பெரஹரவைப்

பார்வையிடுவதற்கான வாய்ப்பை வழங்கும் 'செரண்டிப் உத்தம தலதா' நிகழ்ச்சித்திட்டம் இதில் ஒன்றாகும். இதனைவிடவும், ஒதுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த சமூகத்தை வலுவூட்டும் '7 ஸ்டார் மனுசத்கார' நிகழ்ச்சித்திட்டம் சமூக முன்னேற்றம் தொடர்பான செரண்டிப் கோதுமை மா ஆலையின் அர்ப்பணிப்புக்கு சிறந்த உதாரணமாக அமைந்துள்ளது.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட தரம்மிக்க கோதுமை மாவை நுகர்வது எப்போதும் வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பானதாக இருக்கும் என்பதை செரண்டிப் கோதுமை மா ஆலை நிறுவனம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது.

உயர் தரம் மற்றும் கடுமையான கட்டுப்பாட்டுத் நடவடிக்கைகளைப் பின்பற்றுவதில் நிறுவனம் கொண்டுள்ள உறுதிப்பாட்டின் ஊடாக அனைத்து இலங்கையர்களுக்கும் ஊட்டச்சத்து மிக்க சிறந்த கோதுமை மா வழங்கப்படுவதும் உறுதிசெய்யப்படுகின்றது.

## Al Ghurair நிறுவனம் பற்றி:

மத்திய கிழக்கில் உள்ள பாரிய பல்வகை குடும்ப வணிகக் குழுமங்களில் ஒன்றாக விளங்கும் *Al Ghurair* நிறுவனம்,உணவு மற்றும் ஆராய்ச்சி, ஆதனங்கள், கட்டுமானம் மற்றும் சேவைகள்,வலுசக்தி, இயக்கம் மற்றும் தொழில்முயற்சி ஆகிய ஆறு முக்கிய தொழில்துறைகளில் தனது வணிகத்தை வியாபித்துள்ளது.

1960ஆம் ஆண்டு வர்த்தக வணிகமாக ஆரம்பிக்கப்பட்ட *Al Ghurair* நிறுவனம், வளர்ச்சியுற்று வரும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் தொழில்துறை மற்றும் வணிகத்தின் முதலாவது தூண்களில் ஒன்றாகவும் விளங்கியது.

எளிமையான தொடக்கத்தில் ஆரம்பித்து, புத்தாக்கம் மற்றும் தொழில்முயற்சியின் பெருமையான வரலாற்றுடன், *Al Ghurair* குடும்பத்தின் பெயரானது மதிப்புமிக்க நாட்டின் பாரம்பரியம், பரிணாம வளர்ச்சி மற்றும் நோக்கம் என்பவற்றின் மறுபெயராகவும் பதிவாகியுள்ளது.

டியேராவில் தலைமையகமாகக் கொண்டுள்ள இந்த நிறுவனம் உலகம் முழுவதிலும் 50ற்கும் மேற்பட்ட நாடுகளில் தனது பல்வகையான வணிக செயற்பாடுகளை முன்னெடுத்திருப்பதுடன், ஏறத்தாள 28,000ற்கும் அதிகமான பணியாளர்கள் இதில் பணியாற்றுகின்றனர். நிறுவனம் அதன் 60 வருடங்களுக்கும் மேலான பாரம்பரியத்தைத் தொடர்ந்தும் பேணி வருவதுடன், 'வாழ்க்கையை மேம்படுத்தல்' என்ற நோக்கத்தின் கீழ் தான் செயற்படும் சமூகங்கள் மத்தியில் அர்த்தமுள்ள மற்றும் நிலைபேறான மாற்றத்தை ஏற்படுத்த முயற்சிகளை எடுத்துவருகின்றது.

# வில்லனாக அஜித்?





தமிழ் சினிமாவின் மாஸ் நடிகர்களில் ஒருவரான அஜித் நடிக்கும் படங்களில் தான் இதுவரை வில்லனாக ஹிந்தி நடிகர்கள் நடித்திருந்தனர். குறிப்பாக 'விவேகம்' திரைப்படத்தில் நடிகர் விவேக் ஒபராய் வில்லனாக நடித்திருந்தார்.

தற்போது வந்துள்ள தகவல்படி அஜித்தின் 64ஆவது படத்தை சிறுத்தை சிவா இயக்க இருப்பதாக கூறப்படும் நிலையில் இந்த படத்தில் அஜித் வில்லனாக நடிக்க இருப்பதாகவும் ஹிந்தி திரையுலகின் முன்னணி நடிகர் ஒருவர் ஹீரோவாக நடிக்க பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகவும் விரைவில் இந்த படம் குறித்த அறிவிப்பு வெளியாகும் என்றும் கூறப்படுகிறது.

ஏற்கெனவே நடிகர் அஜித் கடந்த 2001 ஆம் ஆண்டு 'அசோகா' என்ற ஹிந்தி திரைப்படத்தில் சிறப்பு தோற்றத்தில் நடித்திருந்தார். அந்த படத்தில் ஷாருக்கான் ஹீரோவாக நடித்திருந்தார்.

இந்த நிலையில், மீண்டும் ஹிந்தி திரையுலகில் அவர் நடிக்க இருப்பதாகவும் அதுவும் வில்லனாக நடிக்க இருப்பதாகவும் கூறப்படுவது எந்த அளவுக்கு சாத்தியம் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# 'பிரேமலு' நடிகைக்காக குவிந்த கூட்டம்

மலையாள நடிகை மமிதா பாஜு மலையாளத்தில் கடந்த 2017 ஆம் ஆண்டு முதல் நடித்து வந்தாலும் அவருக்கு 'பிரேமலு' என்ற படம் தான் சூப்பர் ஹிட் படமாக அமைந்தது. இந்த படம் தமிழ் தெலுங்கு ஆகிய மொழிகளிலும் சேர்த்து 100 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்தது.

மேலும் ஜிவி பிரகாஷ் நடித்த 'ரிபெல்' என்ற தமிழ் படத்தில் மமிதா பாஜு நடித்த நிலையில் தற்போது அவர் பிரதீப் ரங்கநாதன் நடிக்கும் படத்தில், அதன் பின்னர் அதர்வா நடிக்கும் படத்தில் நடிக்க இருப்பதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், சென்னையில் கடை திறப்பு விழாவுக்கு வருகை தந்த மமிதா பாஜுவை பார்க்க ஏராளமான ரசிகர்கள் கூடியதால் அந்த பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

ரசிகர்களின் கூட்டத்திலிருந்து மமிதா பாஜுவை பொலிஸார் மற்றும் அவரது பாதுகாவலர்கள் கஷ்டப்பட்டு பாதுகாப்பாக அழைத்துச் சென்ற வீடியோ இணையத்தில் வைரல் ஆகி வருகிறது.





# 'வேட்டையன்' ஒக்டோபர் வருகிறது

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிப்பில், ஞானவேல் இயக்கத்தில், லைக்கா நிறுவனத்தின் தயாரிப்பில், அனிருத் இசையில் உருவாகி இருக்கும் திரைப்படம் 'வேட்டையன்'. இந்த படத்தின் படப்பிடிப்பு கடந்த சில மாதங்களுக்கு முன் முடிவடைந்த நிலையில் ஒக்டோபர் மாதம் ரிலீஸ் என்று அறிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து இரவு பகலாக பணிகள் நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் தற்போது வந்துள்ள தகவல்படி ஒக்டோபர் 10ஆம் தேதி சரஸ்வதி பூஜை, ஆயுத பூஜை விடுமுறை தினத்தின் போது 'வேட்டையன்' படம் வெளியாக இருப்பதாக கூறப்படுகிறது. இந்த தகவல் ரஜினி ரசிகர்களுக்கு பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளங்களில் ரஜினிகாந்த் நடிக்க இருக்கும் அடுத்த திரைப்படமான 'கூலி' திரைப்படத்தின் படப்பிடிப்பு ஜூன் 10ஆம் திகதி முதல் தொடங்க இருப்பதாகவும் தகவல் கசிந்துள்ளது.

ஒரே நாளில் ரஜினிகாந்தின் 'வேட்டையன்' மற்றும் 'கூலி' ஆகிய இரண்டு படங்களின் அப்டேட் வந்ததை எடுத்து ரஜினி ரசிகர்கள் குஷியில் உள்ளனர்.

# சித்தார்த் – அதிதி சுற்றுலா




நடிகர் சித்தார்த் மற்றும் நடிகை அதிதி ராவ் ஹைத்ரி ஆகிய இருவரும் கடந்த மார்ச் மாதம் திருமண நிச்சயதார்த்தம் செய்து கொண்ட நிலையில் திருமணம் வரும் டிசம்பர் மாதம் நடைபெற இருப்பதாக கூறப்படுகின்றது.

இந்த நிலையில் இருவரும் திருமணத்திற்கு முன்பே வெளிநாட்டு சுற்றுலா சென்ற புகைப்படம் இணையத்தில் வைரல் ஆகி வருகிறது.

இத்தாலி நாட்டில் சித்தார்த் மற்றும் அதிதி ஆகிய இருவரும் இயற்கை எழில் கொஞ்சும் அழகிய இடத்தில் இருக்கும் காட்சிகளின் புகைப்படங்கள் அதிதி இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் அதற்கு 11 இலட்சத்துக்கும் அதிகமான லைக் குவிந்து உள்ளன.

'இந்தியன் 2 'படத்தின் இசை வெளியீட்டு விழாவுக்கு, முக்கிய கேரக்டரில் நடித்த சித்தார்த் வரவில்லை. அவர் அதிதியுடன் வெளிநாட்டு சுற்றுலாவில் இருப்பதால் தான் இந்த விழாவில் கலந்து கொள்ள முடியவில்லை.





சென்னை

கருணாநிதியின் 101ஆவது பிறந்தநாள்

# தலைவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினர்

தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 101ஆவது பிறந்தநாளை ஒட்டி, நேற்று (3) சென்னை மெரினா கடற்கரையில் உள்ள அவரது நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினார் முதல்வர் மு.க.ஸ்டாலின். இதேபோல் தலைவர்கள் பலரும் மரியாதை செலுத்தினர்.

முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 101ஆவது பிறந்தநாள் நேற்று கொண்டாடப்பட்டதையொட்டி தமிழக அரசு சார்பில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவும் கொண்டாடப்பட்டது.

தொடர்ந்து சென்னை கோடம்பாக்கத்தில் உள்ள முரசொலி அலுவலகத்தில் 'தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர் - 2024' என்ற புத்தகத்தை முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட நிலையில், அவரின் அண்ணனும் கருணாநிதியின் மூத்த மகனுமான மு.க.முத்து பெற்றுக்கொண்டார்.

இதேசமயம், டெல்லியில் உள்ள திமுக அலுவலகத்தில், காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியா காந்தி கருணாநிதி படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். அவருடன், முன்னாள் மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு, திமுக எம்பி திருச்சி சிவா, கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் டி.ராஜா ஆகியோரும் மரியாதை செலுத்தினர்.



# மனைவிக்காக அங்கப்பிரதட்சணம்

நடிகர் சரத்குமார் தனது அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி என்ற அரசியல் கட்சியை பாரதிய ஜனதா கட்சியுடன் (பாஜக) கடந்த சில மாதங்களுக்கு முன்பு இணைத்தார். அதன் பிறகு அவரது மனைவியும் நடிகையுமான ராதிகா சரத்குமார் விருதுநகர் தொகுதியில் போட்டியிட வாய்ப்பு அளிக்கப்பட்டது.

விருதுநகர் தொகுதியில் நடிகை ராதிகா சரத்குமாரை எதிர்த்து அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் (அதிமுக) கூட்டணியில் தேசிய முற்போக்கு திராவிட கழகம் (தேமுதிக) சார்பில் விஜயகாந்த் மகன் விஜய பிரபாகரன் போட்டியிட்ட நிலையில் இருவருக்கும் இடையே கடும் போட்டி நிலவுவதாக கூறப்பட்டது. மேலும் இந்த தொகுதியில் காங்கிரஸ் கட்சியின் சிட்டிங் எம்பி மாணிக்கம் தாகூர் போட்டியிட்டதால் மும்முனை போட்டி சூடு பிடித்தது.

ஏப்ரல் 19ஆம் திகதி தேர்தல் வாக்குப்பதிவு நடைபெற்ற நிலையில் இன்று (04) வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளது. இந்நிலையில் நடிகர் சரத்குமார் தனது மனைவி ராதிகா சரத்குமார் விருதுநகர் தொகுதியில் ஜெயிக்க வேண்டும் என்பதற்காக விருதுநகர் ஸ்ரீ பராசக்தி மாரியம்மன் கோவிலில் அங்கப்பிரதட்சணம் செய்தார்.



மெக்சிகோ

# மெக்சிகோவின் முதல் பெண் ஜனாதிபதி



மெக்சிகோ நாட்டில் 200 ஆண்டுகால தேர்தல் வரலாற்றில் முதல் பெண் ஜனாதிபதியாக கிளாடியா ஷீன்பாம் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதனை அதிகாரபூர்வ விரைவான எண்ணிக்கை (Quick Count) உறுதி செய்துள்ளது. தன்னுடன் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட்ட எதிர்க்கட்சி வேட்பாளர்கள் இருவர், தனக்கு வாழ்த்து சொல்லி உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

"நான் மெக்சிகோ நாட்டின் முதல் பெண் ஜனாதிபதி ஆகிறேன். இது எனது வெற்றி மட்டுமல்ல. நம் அனைவருடைய வெற்றியாகும். தாய்மார்களுக்கான வெற்றி. இதன் மூலம் மெக்சிகோ ஜனநாயக நாடு என்பதை நாம் நிரூபித்துள்ளோம்" என கிளாடியா ஷீன்பாம் தனது வெற்றி உரையில் தெரிவித்தார்.

மாலைத்தீவு


மாலைத்தீவில்

# இஸ்ரேலியர்களுக்கு தடை?

இஸ்ரேலியர்கள் மாலைத்தீவுக்குள் நுழைவதைத் தடை செய்யும் வகையிலான சட்டத்தை முன்மொழிய அந்நாட்டு அரசு திட்டமிட்டுள்ளது. இதனிடையே மாலைத்தீவில் இருக்கும் தங்கள் குடிமக்களை வெளியேறுமாறு இஸ்ரேல் அறிவித்துள்ளது கவனிக்கத்தக்கது.

இஸ்ரேல் மக்கள் தங்கள் நாட்டுக்கு வருவதைத் தடை செய்யும் வகையில் சட்டங்களைத் திருத்த ஜனாதிபதி முய்சு தலைமையிலான மாலைத்தீவு அரசு முடிவு செய்தது.

மேலும், பலஸ்தீனர்களுக்காக நிதி திரட்டவும் மாலைத்தீவு அறிவித்துள்ள நிலையில், அதற்காக ஒரு தூதரும் நியமிக்கப்படவிருக்கிறார். இது தொடர்பான தகவல் வெளியான நிலையில், தற்போது மாலைத்தீவில் தங்கியுள்ள இஸ்ரேல் மக்கள் உடனடியாக அங்கிருந்து வெளியேறுவது குறித்துப் பரிசீலிக்குமாறு இஸ்ரேல் அறிவித்துள்ளது.



போர்த்துகல்

விமான சாகச நிகழ்ச்சியில்

# விமானி உயிரிழப்பு

போர்த்துகல் நாட்டின் தெற்கில் உள்ள பெஜா விமான நிலையத்தில் நடைபெற்ற விமான சாகச நிகழ்ச்சியின் போது இரு சிறிய ரக விமானங்கள் மோதிக் கொண்டதில், விமானி ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன் மற்றொரு விமானி காயமடைந்துள்ளார்.

நடுவானில் விமானங்கள், ஹெலிகொப்டர்கள் அடுத்தடுத்து சாகசங்களில் ஈடுபட்டு வந்த நிலையிலேயே, மேற்குறிப்பிட்ட விமானங்கள் மோதிக் கொண்டன.

இந்த விபத்தையடுத்து குறித்த விமான சாகச நிகழ்ச்சி இடைநிறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



# 'இந்திய அணிக்கு பயிற்சியளிக்க விரும்புகிறேன்'

இந்திய கிரிக்கெட் அணிக்கு பயிற்சியளிக்க விரும்புவதாக இந்திய அணியின் முன்னாள் வீரர் கௌதம் கம்பீர் தெரிவித்துள்ளார்.

இந்தியன் பிறீமியர் லீக்கின் கொல்கத்தா நைட் றைடர்ஸின் ஆலோசகரான கம்பீரை இந்திய அணியின் பயிற்சியாளர் பதவிக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அணுகியிருந்தபோதும், அவர் மே 27ஆம் திகதி என்ற பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பிக்கும் இறுதி நாளுக்கு முன்னர் விண்ணப்பித்தாரா என உறுதிப்படுத்தப்படவில்லை.



இன்னுமொரு பதவிக்காலத்தைப் பெற விரும்பவில்லையென தற்போதைய இந்திய அணியின் பயிற்சியாளர் ராகுல் ட்ராவிட் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் தெரிவித்ததாகவும், ட்ராவிட்டைப் பிரதியிடுவாரென எதிர்பார்க்கப்பட்ட வி.வி.எஸ் லக்ஸ்மனும் தனிப்பட்ட காரணங்களால் பயிற்சியாளர் பதவியை விரும்பவில்லையெனக் கூறப்படுகிறது.

றியல் மட்றிட் ஒப்பந்தத்தில்

# மப்பே கைச்சாத்து

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான றியல் மட்றிட்டில், தனது பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனுடனான ஒப்பந்தம் இம்மாதம் 30ஆம் திகதி முடிவடையும்போது இணையும் ஒப்பந்தமொன்றில் கிலியான் மப்பே கைச்சாத்திட்டுள்ளார்.

வாய்மொழி ரீதியாக மட்றிட்டில் இணைய இவ்வாண்டு பெப்ரவரியில் இணங்கியிருந்த 25 வயதான மப்பே, பருவகால முடிவில் பரிஸ் ஸா ஜெர்மைனிலிருந்து விலகவுள்ளதாக கடந்த மாதம் அறிவித்திருந்தார்.

எதிர்வரும் 2029ஆம் ஆண்டு வரையான ஒப்பந்தத்துக்கு மட்றிட்டுடன் இணங்கியுள்ள மப்பே, பருவகாலமொன்றுக்கு 15 மில்லியன் யூரோக்களைப் பெறவுள்ளதுடன், மேலதிகமாக கைச்சாத்திடும் 150 மில்லியன் யூரோக்களையும் பெறவுள்ளார் என்பதோடு, தனது காப்புரிமைகளில் குறிப்பிட்ட சதவீதத்தை தான் வைத்துக் கொள்ளவுள்ளார்.



# பெனர்பாச்சே முகாமையாளர்



துருக்கிய கால்பந்தாட்டக் கழகமான பெனர்பாச்சே, இத்தாலிய சீரி ஏ கழகமான றோமாவின் முன்னாள் முகாமையாளராண ஜொஸே மொரின்யோவை புதிய பயிற்சியாளராக ஞாயிற்றுக்கிழமை (02) வெளிப்படுத்தியுள்ளது.

பெனர்பாச்சேயுடனான மொரின்யோவின் ஒப்பந்த விவரங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

இருபதுக்கு – 20 உலகக் கிண்ணம்:

# பப்புவா நியூ கினியை மே.தீவுகள் வென்றது

## ஓமானை சுப்பர் ஓவரில் வென்ற நமீபியா

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு – 20 உலகக் கிண்ணத் தொடரில், கயானாவில் ஞாயிற்றுக்கிழமை (02) இரவு நடைபெற்ற பப்புவா நியூ கினியுடனான குழு சி போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட பப்புவா நியூ கினி, செசே பௌவின் 50 (43), கிப்லின் டொரிகாவின் ஆட்டமிழக்காத 27 (18) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், அன்ட்ரே ரஸல் 3-0-19-2, அல்ஸாரி ஜோசப் 4-0-34-2, அகீல் ஹொஸைன் 3-0-9-1, றொமாரியோ ஷெப்பர்ட் 3-0-23-1, குடகேஷ் மோட்டி 3-0-24-1, றொஸ்டன் சேஸ் 4-0-26-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 137 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள், சேஸின் ஆட்டமிழக்காத 42 (27), பிரண்டன் கிங்கின் 34 (29), நிக்கலஸ் பூரானின் 27 (27), அன்ட்ரே ரஸலின் ஆட்டமிழக்காத 15 (09), அணித்தலைவர் றொவ்மன் பவலின் 15 (14) ஓட்டங்களோடு 19 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், அசாட் வலா 4-1-28-2, அலெய் நாவோ 2-1-9-1, ஜோன் கரிகோ 4-0-17-1, சாட் சொபர் 3-0-19-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக சேஸ் தெரிவானார்.

இதேவேளை பார்படோஸில் திங்கட்கிழமை (03) ஓமானுடனான குழு பி போட்டியில் நமீபியா வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட ஓமான் 19.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், காலிட் கைல் 34 (39), ஸீஷன் மஸ்கூட் 22 (20), அயான் கான் 15 (21), ஷகீல் அஹ்மட் 11 (09) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ருபென் ட்ரம்பெல்மன் 4-0-21-4, டேவிட் விஸே 3.4-28-3, அணித்தலைவர் ஜெர்ஹார்ட் எரஸ்மஸ் 4-0-20-2, பெர்னார்ட் ஸ்கொல்ட்ஸ் 4-0-20-1, தஞெனி லுகமெனி 4-0-18-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.



பதிலுக்கு 110 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நமீபியாவும் 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஜன் பிரைலிங்க் 45 (48), நிகொலாஸ் டாவின் 24 (31) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், மெஹ்ரன் கான் 3-1-7-3, அணித்தலைவர் ஆகிப் இல்யாஸ் 4-1-17-1, அயான் கான் 2-0-12-1, பிலால் கான் 4-0-25-1, கலிமுல்லாஹ் 2-0-10-0, ஸீஷன் மக்ஸூட் 2-0-12-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

சுப்பர் ஓவரில் விஸேயின் ஆட்டமிழக்காத 13 (04), எரஸ்மஸ்ஸின் ஆட்டமிழக்காத 08 (02) ஓட்டங்களோடு விக்கெட் இழப்பின்றி முதலில் துடுப்பெடுத்தாடிய நமீபியா விக்கெட் இழப்பின்றி 21 ஓட்டங்களைப் பெற்றது.

இந்நிலையில் விஸே வீசிய சுப்பர் ஓவரில் ஒரு விக்கெட்டை இழப்பின்றி 10 ஓட்டங்களையே பெற்ற ஓமான் தோல்வியடைந்தது. இல்யாஸ் ஆட்டமிழக்காமல் 07 (02) ஓட்டங்களைப் பெற்றனர்.

இப்போட்டியின் நாயகனாக விஸே தெரிவானார்.

இந்நிலையில் பார்படோஸில் இன்றிரவு 8 மணிக்கு நடைபெறவுள்ள குழு பி போட்டியில் ஸ்கொட்லாந்தை இங்கிலாந்து எதிர்கொள்ளவுள்ளதுடன், ஐக்கிய அமெரிக்காவின் டலாஸில் இரவு 9 மணிக்கு நடைபெறவுள்ள குழு டி போட்டியில் நேபாளத்தை நெதர்லாந்து எதிர்கொள்ளவுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 03 , ஜூன் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.